RESEARCH ARTICLE

DOI: 10.34256/irjt21114

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

வள்ளலார் கருத்தில் இயற்கையே இறை

த. குருநாதன் [அ, *], நா. சாந்தகுமாரி [அ]

[அ] தமிழ்த்துறை, பூம்புகார் கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது) மேலையூர்-609107, தமிழ்நாடு, இந்தியா.

Vallalar's Perception – Nature is Divine

D. Gurunathan [a,*], N. Santhakumari [a]

[a] Department of Tamil, Poompuhar College (Autonomous) (Affiliated to Bharathidasan University), Melaiyur-609107, Tamil Nadu, India.

* Corresponding Author:
dgurunathanma@gmail.com

Received : 17-10-2020
Accepted : 09-12-2020

ABSTRACT

Finding and understanding the lord by nature is the conclusion the benefactors saw. Such nature has been worshiped as a god since ancient times. Preserving nature from extinction and receipt of the Divine has been recorded from the beginning to the present day. In this way, Vallalar, in his Thiruvarutpa saw the nature and its splendor together with the lord. This article examines his vision of nature and its uniqueness, as well as its ability to bring together the lord who helps us to act.

Keywords: Vallalar, God, Nature, Elements of Nature, Thiruvarutpa.

ஆசிரியர் குறிப்பு

த. குருநாதன், மேலையூர், பூம்புகார் கல்லூரியின் தமிழ்த்துறையில் 2017-ம் ஆண்டு முதல் முனைவர் உதவி பேராசிரியர் நா.சாந்தகுமாரி அவர்களின் நெறியாளுகையின் கீழ் "வள்ளலார் கண்ட தவநெறிகள்" என்னும் தலைப்பில் பகுதிநேர முனைவர் பட்ட மாணவராக ஆய்வு செய்து வருகின்றார். 2013-ம் ஆண்டு சென்னை, தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில் தமிழில் முதுகலைப்பட்டத்தில் மாநில அளவில் முதன்மையாக தேர்ச்சி பெற்று தங்கப் பதக்கமும், தரச்சான்றும் தமிழக ஆளுநர் கரங்களால் பெற்றுள்ளார். தற்போது 16 ஆண்டுகள் பணி அனுபவத்துடன் திருப்பனந்தாள் ஒன்றியம், திருவள்ளியங்குடி அரசுப்பள்ளியில் இடைநிலையாசிரியராகப் பணியாற்றி வருகின்றார்.

முனைவர் நா. சாந்தகுமாரி அவர்கள் தருமபுரம் ஆதீனம் கலைக்கல்லூரியில் நாகை மாவட்ட மீனவர்களின் வாழ்வியல் எனும் தலைப்பில் 2007-ல் முனைவர் பட்டம் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பெற்றார். இவர் நாகை மாவட்ட மீனவர் பெண்களில் முதல் முனைவர் பட்டம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர், பூம்புகார்க்கல்லூரி தமிழ்த்துறையில் உதவிப்பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். இணைய வழியில் தேசியக்கருத்தரங்கு ஒன்றினையும் பன்னாட்டுக்கருத்தரங்கு ஒன்றினையும் நடத்தியுள்ளார். தேசிய அளவில் 11 கட்டுரைகளையும், பன்னாட்டு அளவில் 9 கட்டுரைகளையும்

வெளியிட்டுள்ளார். நாகை மாவட்ட மீனவர்களின் நாட்டுப்புறப்பாடல்களை ஆய்வுக்கட்டுரைகளாக அகில இந்திய வானொலிக்கு தொகுத்தளித்துள்ளார். சிறந்தமிழறிஞர், பாரதிதமிழ்ச்செல்வர், வாழ்நாள் சாதனையாளர், சிறந்த கல்வியாளர், செந்தமிழ்ச்சுடர், எழுத்தாளர் பிரபஞ்சன் போன்ற விருதுகளையும் பெற்றுள்ளார். தமிழறிஞர் முல்லைவாணன், கடலைத்தேடி, பாட்டியின் வெத்தலப்பெட்டி ஆகிய நூல்களையும் வெளியிட்டு இயல் இசைகள் மூலம் தமிழுக்குத் தொண்டாற்றி வருகிறார்.

முன்னுரை

உலக வாழ்வில் வளமையும், குளுமையும் ஏற்படுத்தும் சூழல் இயற்கையாகும். நம் கண்களுக்குப் பசுமையையும் அதனால் மனம் பெறும் புத்துணர்வையும் இயற்கை வழங்குகிறது. அத்தகைய இயற்கையைப் பாதுகாப்பதும், சுற்றுச்சூழல் கெடாமல் வைத்துக் கொள்வதும் மனிதனின் கடமையாகும். இயற்கையாகிய நிலம், நீர், தீ, வளி, விண் என்னும் ஐம்பூதங்களின் படைப்பு பற்றியும் அதன் சிறப்பு தன்மைகளையும் இக்கட்டுரை விளக்குகிறது.

ஆய்வு நோக்கம்

ஐம்பெரும் பூதங்களாக விளங்கும் இயற்கையின் சூழலுக்கு ஏற்ப இயங்கும் மனிதவாழ்வு சிறப்புறும். மனிதன் இயற்கை வளங்களைச் சீரழித்தால் மாசடைந்து பேரழிவு ஏற்படும். இதனைத் தடுக்கும் நிலையில் இயற்கையே இறையாக எண்ணும் வள்ளலாரின் கோட்பாட்டை அறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இயற்கை

இயற்கை என்பது இயல்பாக இருக்கும் தோற்றப்பாடு என்னும் பொருள் கொண்டது. இயல்பாகத் தோன்றி மறையும் பொருட்கள், அவற்றின் இயக்கம், அவை இயங்கும் இடம், இயங்கும் காலம் ஆகியவை அனைத்தையும் இணைத்து இயற்கை எனலாம். உயிரினமும், இயற்கையின் பகுதியே ஆகும். “இயற்கை அரங்கு மானிட அரங்கு ஆகிய இரண்டு களங்களே கவிஞனின் தொழிற்சாலைகள்” என மு. வரதராஜன் குறிப்பிடுகிறார் (Varadharasan, 1998). சங்கப் புலவர்கள் இயற்கை அரங்கை துணையாக்கி மானிட இயக்கத்தைத் தம் படைப்புகளில் எழிலுறப் புனைந்துள்ளனர்.

சுற்றுச்சூழல் என்னும் இயற்கைச்சூழல் உலகில் இயல்பாய் அமைந்த ஒன்றாகும். மனிதனால் உருவாக்கப்படும் சுற்றுச்சூழல் இயற்கையை மாசுபடுத்தி மனிதனின் ஆரோக்கியத்தைக் கெடுக்கும் வல்லமை பெற்றுவிடுகிறது. அறிவியல், தொழிற்சாலை அதிகரிப்பு, நிலம், நீர், காற்று, தீ, விண் என்னும் ஐந்தும். இறைவனின் படைப்பாய் திகழ்கிறது. அந்த வகையில் மண்ணையும் மண்ணின் தன்மையையும், தீயையும் தீயின் தன்மையையும், காற்றையும் காற்றின் தன்மையையும் நீரையும் நீரின் தன்மையையும், வானையும் வானின் தன்மையையும் என்ற ஐம்பூதங்களாகிய இயற்கையின் நிலையினை இறைவனின் வடிவாக வள்ளலார் **"இயற்கை இன்ப வடிவினரே இயற்கை விளக்கத்தவரே" (திருவருட்பா, ஆறாம் திருமுறை பா.5225)** என்று பதிவு செய்துள்ளார் (Thiruvarutprakasa Vallalar, 2004).

இயற்கை நெறியும் இறை நெறியும்

மனிதனால் உருவாக்க முடியாத அழகிய நிலையில் இயற்கை விளங்குகிறது. இயற்கையோடு இயைந்து வாழ்ந்த மனிதன் இயற்கையை வென்று நாகரிகம் என்ற பெயரால் இயற்கைக்குப் பேரிடர் செய்து வருகின்றான். வள்ளலார்

"வானே அவ்வானுலவும் காற்றே காற்றின்
வரு நெருப்பே நெருப்புறுநீர் வடிவே நீரில்
தானேயும் புவியேஅப் புவியில் தங்கும்
தாபரமே சங்கமமே".

என (**திருவருட்பா, மகாதேவமாலை, முதல் திருமுறை பா.**137) ல் பதிவு செய்துள்ளதையும்,

"விண்ணேவிண் உருவே விண்முதலே விண்ணுள் வெளியே அவ்வெளி விளங்கு வெளியே" (மேலது, பா.138) வள்ளலார் இயற்கைதான் இறைவன் என்பதை வலியுறுத்திக் கூறியுள்ளார் (Thiruvarutprakasa vallalar, 2007). இறைவன் பஞ்சபூதமாய் விளங்கும் நிலையினையும், அதன் செயற்பாட்டிற்கு இறைவன் உறுதுணையாய் விளங்குவதையும் பதிவு செய்துள்ளார். இறைவனின் இயக்கமே இயற்கையின் இயக்கமாக கருதி தெளிவு பெற்றிருந்ததை அறியமுடிகிறது.

இயற்கைக் காட்சிப்பொருள்களில் கடவுளின் இயல்பைக் கண்டனர். திருமாலின் இயல்பைக் கூறும் பரிபாடலில்,

“தீயினுள் தெறல்நீ! பூவினுள் நாற்றம்நீ!
கல்லினுள் மணியும்நீ! சொல்லினுள் வாய்மைநீ!
அறத்தினுள் அன்புநீ! மறத்தினுள் மைந்தநீ!
வேதத்து மறைநீ! பூதத்து முதலும்நீ!
வெஞ்சுடர் ஒளியும்நீ! திங்களுள் அளியும்நீ!
அனைத்தும்நீ! அனைத்தின் உட்பொருளும் நீ! (பரிபாடல், பா.3, அடி.63-68) என்று குறிப்பிடப்பட்டுள்ளது (Kaduvan Elaveyinanar, 2009).

வள்ளலார் வாழையடி வாழையென வந்த திருக்கூட்டமரபில் வந்தவர் என தம்மைக் கூறுவதால் இறைவனை இயற்கையாகவும், இயற்கையை இறைவனின் வடிவமாகவும் கண்டு தாமும் அவர்கள் கூறிய நிலையிலேயே திருவருட்பாவில் பதிவு செய்துள்ளார்.

வள்ளலார் இயற்கைச்சூழலை அடிப்படையாகக் கொண்டு இறைவனின் அருட்தன்மையை விளக்கும் முகமாக திருவருட்பா, அருள்விளக்க மாலையில்,

“கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண்ணீரே
உகந்ததண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்தில்உறும் பயனே

ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசேஎன் அலங்கல்அணிந் தருளே" (**திருவருட்பா, பா.4091).**

என்று இறைவனின் அருளும், இயற்கையின் இயல்பும் வேறன்று என்பதும் இறைவனின் திருவருளை விளக்க இயற்கையின் தன்மையினைக் கூறி மெய்ப்பிக்கும் நிலையைக் காணமுடிகிறது (Thiruvarutprakasa Vallalar, 2004).

மண்ணின் திண்மை

மண் என்பது நிரந்தரமாக அமைந்த பூமியின் திண்ணிய மேற்பரப்பு ஆகும். வேளாண்மை, வாழிடம், இயற்கை வளங்கள் ஆகியவை நிலத்திலேயே நடந்துள்ளன. நிலத்தடியில் நிலக்கரி 26%, வாயு 23%, எண்ணெய் 36%, மற்றவை 15% எனக் கனிம வளங்கள் உள்ளன (Umamaheswari, M., & Murugavel, T., 2009). இவற்றையெல்லாம் மனிதன் தன்னுடைய தேவைக்கேற்ப பயன்படுத்திக் கொள்கிறான்.

பழங்காலத்தில் இத்தகைய மண்ணாகிய பூதத்தை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐந்திரமாக வகுத்ததும், ஐவகைத் தாதுப்பொருட்களாகிய பொன், வெள்ளி, இரும்பு, செம்பு, ஈயம் என்பவை மண்ணில் இருந்து கிடைக்கப்பெற்றதும், கருமண்ணிலம், செம்மண்ணிலம், உவர்நிலம், சுண்ணாம்பு நிலம், கந்தக நிலம், முரம்பு நிலம் எனப் பல திறமுடைய மண் அமைந்ததும், மண்ணகவாழ்வில் ஐவகை ஒழுக்கங்களான புணர்தல், இருத்தல், பிரிதல், ஊடல், இரங்கல் என்பவற்றை வகுத்து அவற்றுள் திணை பலக்காட்டிப் பயன்நுகர அமைத்து மண்ணின் சக்தியினைப் படைத்தருளிய தன்மை அருட்பெருஞ்ஜோதியாகிய இறைவனைச் சாரும்

"மண்ணினில் ஐம்பூ வகுத்ததில் ஐந்திரம்
அண்ணுற அமைத்த அருட்பெருஞ்ஜோதி" (**திருவருட்பா, பா.3273), அடி.371-372)**
"மண்ணினில் பற்பல வகைகரு நிலஇயல்
அண்ணுறப் புரிந்த அருட்பெருஞ்ஜோதி
மண்ணினில் ஐந்தியல் வகுத்ததில் பல்பயன்
அண்ணுற வகுத்த அருட்பெருஞ்ஜோதி" (**மேலது, அடி.375-378)**
"மண்கரு உயிர்த்தொகை வகைவிரி பலவா
அண்கொள அமைத்த அருட்பெருஞ்ஜோதி" (**மேலது அகவல் அடி.393-394)**

என்று மண்ணின் பல்வேறு சக்திகளையும் குறிப்பிட்டு இறைவனால் படைக்கப்பட்ட தன்மையினையும், அம்மண்ணின் சிறப்புத்தன்மைகளை வள்ளலார் அருட்பெருஞ்ஜோதி அகவலில் குறிப்பிடுகிறார்.

நீர்வளம்

நீர் என்பது நிறமற்றும், நெடியற்றும் ஒரு ஒளிபுகும் தன்மைக்கொண்ட தோற்றப்பொலிவுடையது. ஓடை, குளம், ஏரி, கடல் அனைத்தும் நீரால் ஆக்கப்பட்டுள்ளன. உயிரினங்கள் அனைத்தும் உயிர் வாழ்வதற்கு நீர் இன்றியமையாததாகும். பூமியில் நீர் 71%

பகுதியால் சூழப்பட்டுள்ளது. இத்தகைய நீர் அழுத்தும் சத்தி, மேலே எழுப்பும் சத்தி, பக்கமெல்லாம் பரந்து நிறையும் சத்தி, உருவாயும், அருவாயும் ஆகும் சத்தி, கற்போல் உறையும் சத்தி என அதன் உண்மை நிலையினையும், வெப்பமுறுதல், தண்ணிதாதல் ஆவியாதல், பனிக்கட்டியாய் உறைதல், நிலத்தியல்புக்கேற்பத் திரிதல் முதலிய பல்வேறு நிலைகளையும் வள்ளலார் குறிப்பிட்டுள்ளார்.

மனிதர்களுக்கும், ஏனைய உயிரினங்களுக்கும் தூய்மையான குடிநீர் இன்றியமையாதது. உலக வர்த்தகத்தில் நீர் முக்கிய பங்காற்றுகிறது. வள்ளுவர் மழைநீர் அவசியத்தை,

"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை"

என்று குறிப்பிடுகிறார் (Thiruvalluvar, 2000).

இதனின் முக்கியத்துவத்தை உணர்ந்து நீரினை இறைவனின் தன்மையில் ஒன்றாக வள்ளலார்,

"நீரிடை நான்கியல் நிலவுவித் ததிற்பல
ஆர்தர வகுத்த அருட்பெருஞ்ஜோதி" (**திருவருட்பா, பா.3273, அடி 413-414**)
"நீரிடைச் சத்திகள் நிகழ்வகை பலபல
ஆர்தர வகுத்த அருட்பெருஞ்ஜோதி" (**மேலது, அடி.419-420**)

என நீரின் சிறப்புத் தன்மையினையும், பல்வேறு சக்திகளையும் படைத்தளித்த இறைவனின் தன்மையினையும் குறிப்பிடுகிறார்.

தீச்சுடர்

தீ என்பது வெப்பத்தை உமிழும் செயலாகும். தீயின் கண் வெண்மை முதலிய நிறம் விளங்கும் இயல்புகளை வகுத்து அருளியதும், ஒளியாகிய இயல்பு அமைத்து அதன் கண் பல்வேறு குணநலன்களைப் படைத்தருளியதும், அருநிலை, கருநிலை, திருநிலை என்று மூன்று நிலைகள் பொருந்த அமைத்தருளியதும், சத்தம், பரிசம், உருவம் என்று மூன்று குணங்கள் அமைய படைத்தருளியதும், யோக சித்தர்கள் யோகத் தீயில் அரிய சாதனங்களாகிய அற்புதங்களைப் பெறுவதும் எல்லாம்வல்ல அருட்பெருஞ்ஜோதியினால் ஆகும் என்று வள்ளலார் குறிப்பிடுகிறார்.

"தீயிடை அருநிலை திருநிலை கருநிலை
ஆயுற அமைத்த அருட்பெருஞ்ஜோதி" (**திருவருட்பா, பா.3273, அடி.439-440**)
"தீயிடைச் சித்துகள் செப்புறு மனைத்தும்
ஆயுற வமைத்த அருட்பெருஞ்ஜோதி
தீயிடைச் சத்திகள் செறிதரு சத்தர்கள்
ஆய்பல வகுத்த அருட்பெருஞ்ஜோதி" (**மேலது, அடி.447-450**)

என தீயின் சுடும் சத்தி, அடும் சத்தி, ஒளிரும் சத்தி, இருள்நீக்கும் சத்தி, விரிக்கும் சத்தி, சுருக்கும் சத்தி, உருவை அருவமாக்கும் சத்தி என்று பல சத்திகளையும் விளக்கி உள்ளும்

புறமுமாய் விளங்கும் அருட்பெருஞ்ஜோதியை வள்ளலார் குறிப்பிடுகிறார்.

காற்றுச்சூழல்

காற்று ஓரிடத்தில் இருந்து இன்னோரிடத்திற்கு நகரும் நிலையைக் குறிக்கும். வளிமண்டலத்தில் வளிமம் பெரும் அளவில் நகரும் பொழுது காற்று எனப்படுகிறது. காற்றாகிய பூதத்திற்கு அசையும் இயல்பும், உடம்பின் கண் கலைகளாய் பிரிந்து இயங்கும் இயல்பும், உயிர்வடிவாய் உடல்முற்றும் நிலவும் இயல்பும், கருநிலையும், பெருநிலையும் அமைந்தருளிய திறமும், மென்மை, வன்மை, சுகதுக்கங்களை செய்தல் முதலிய குணங்களும், ஆக்கல், காத்தல், அழித்தல் என்ற மூவகை சத்திகளையும் கொண்ட பேராற்றலை உடையது. இதனை அமைத்து அருளிய திறன் அருட்பெருஞ்ஜோதியாகிய இறைவனைச் சாரும்.

"காற்றினில் குணம்பல கணம்பல வணம்பல
ஆற்றலின் அமைத்த அருட்பெருஞ்ஜோதி
காற்றிடைச் சத்திகள் கணக்கில உலப்பில
ஆற்றவும் அமைத்த அருட்பெருஞ்ஜோதி"

(திருவருட்பா, பா.3273, அடி.473-476)

எனக் காற்றின் குண, இன இயல்புகளையும் மேலும்,

"காற்றுருவோ கனல்உருவோ கடவுள்உரு என்பார்
காற்றுருவும் கனல்உருவும் கண்டுரைப்பீர் என்றால்
வேற்றுருவே புகல்வர் அதை வேறொன்றால் மறுத்தால்
விழித்துவிழித் தெம்போல்வார் மிகவும்மருள் கின்றார்
தோற்றும் அந்தத் தத்துவமும் தோற்றாத்தத் துவமும்
துரிசாக அவைகடந்த சுகசொருபம் ஆகி
மாற்றமனம் உணர்வு செல்லாத் தலத்தாடும் பெருமான்
வடிவுரைக்க வல்லவர் ஆர் வழுத்தாய்என் தோழி"

(திருவருட்பா, பா.5638)

என்று திருவடிப்பெருமை என்னும் பகுதியில் வள்ளலார் இயற்கையாய் வடிவம் அமைந்த இறைவனின் உருவத்தை விளக்க முடியாது என்கிறார்.

வானியல்

வானம் பூமியின் மேற்புறத்திலிருந்து குறிப்பிட்ட எல்லைக்கு அப்பால் விரிந்திருக்கும் அனைத்தையும் உள்ளடக்கிய பரந்த வெளியைக் குறிக்கும். வளிமண்டலத்தையும், அதற்கு அப்பால் உள்ள விண்வெளியையும் சேர்த்து உள்ளடக்கியதாகும். இந்த வெளியிலே சூரியன், நிலா, விண்மீன்கள் போன்றவற்றின் அசைவுகளை நாம் காண்கிறோம்.

"விண்ணினுள் விண்ணாய் விண்ணிலை விண்ணாய்
அண்ணி வயங்கும் அருட்பெருஞ்ஜோதி" (**திருவருட்பா, பா.3273, அடி.339-340)**

என விண்ணையும், விண்ணின் வெளியையும்,

“வெளியிடைப் பகுதியின் விரிவியல் அணைவியல்
அளியுற அமைத்த அருட்பெருஞ்ஜோதி” (**மேலது, அடி.493-494**)

“வெளியினில் ஒலிநிறை வியனிலை அனைத்தும்
அளியுற அமைத்த அருட்பெருஞ்ஜோதி” (**மேலது, அடி.497-498**)

என்றுரைத்து,

“விண்ணெலாம் கலந்த வெளியில் ஆனந்தம்
விளைந்தது விளைந்தது மனனே
கண்ணெலாம் களிக்கக் காணலாம் பொதுவில்
கடவுளே என்று நம் கருத்தில்
எண்ணலாம் எண்ணி எழுதலாம் எழுதி
ஏத்தலாம் எடுத்தெடுத் துவந்தே
உண்ணலாம் விழைந்தார்க் குதவலாம் உலகில்
ஓங்கலாம் ஓங்கலாம் இனியே” (**திருவருட்பா, பா.5432**)

என இறைவனின் பல்வேறுதன்மைகளில் வெளியை உருவாக்கி வழங்கிய இறைவனின் பேரருள் தன்மையை விளக்குகிறார்.

இவ்வாறு ஐம்பெரும்பூதங்களாக விளங்கும் "எல்லாமுடைய இயற்கை விளக்கக்கடவுளே!" (திருவருட்பா, உரைநடைப்பகுதி, பக் 562) "எல்லாமாகிய இயற்கையின்பக்கடவுளே!" (மேலது, பக் 564), "இயற்கை இன்பமானவரே இயற்கை நிறைவானவரே" (திருவருட்பா, ஆறாம் தி.மு பா.5225) இயற்கையே இன்பக்கடவுளாகவும் விளங்குவதாக வள்ளலார் குறிப்பிட்டுள்ளார் (Thiruvarutprakasavallalar, 2004; Thiruvarutprakasavallalar, 2008).

முடிவுரை

மனிதன் பிறந்து வளர்ந்து வாழ்ந்து மடியும் வரை துணையாக இருக்கும் இயற்கையை அறிவியலார் கூறுவதற்கு முன்பே அருளாளர்கள் இறைவனோடு இயைந்த இயற்கையைப் பாடல்வழி பதிவு செய்துள்ளனர். ஐம்பூதங்களாய் விளங்கும் இறைவனின் இறையருளை எண்ணி வியந்தனர். இவ்வகையில் இயற்கையையே இறையாக எண்ணி வள்ளலார் நோக்குவதையும் அவரது கருத்தால் அறிய முடிகிறது. ஐம்பூத இயல்பிலேயே இறையை இயற்கையாகப் போற்றும் வகையில் வள்ளலாரின் திருவருட்பா பாடல்கள் அமைந்துள்ளதை இக்கட்டுரையின் வாயிலாக தெளிவாக அறிய முடிகிறது.

References

Varadharasan, M., (1998), Nature in Pazhanthamizh Literature, Parinilayam, Chennai, India.

Kaduvan Elaveyinanar., (2009), Paripadal, 1st ed., Saratha Pathipagam, Chennai, India.

Thiruvarutprakasa Vallalar., (2004), Thiruvarutpa, Sixth Thirumurai, 3rd ed., Thriuvarutprakasa Vallalar Deiva Nilayam, Vadalur, India.

Umamaheswari, M., Murugavel, T., (2009), Environmental Education, 2nd ed., Nalnilam pathipagam, Chennai, India.

Thiruvalluvar, (2000), Thirukkural, Reprinted, Tamil University, Thanjavur, India.

Thiruvarutprakasa Vallalar, (2008), Thiruvarutpa Urainataipaguthi, 6th ed., Thriuvarutprakasa Vallalar Deiva Nilayam, Vadalur, India.

Thiruvarutprakasa Vallalar, (2007), Thiruvarutpa, One - Five Thirumurai, 3rd ed., Thriuvarutprakasa Vallalar Deiva Nilayam, Vadalur, India.

Funding: NIL

Acknowledgement: NIL

Conflict of Interest: NIL

About the License:

Attribution 4.0 International (CC BY 4.0)

© The authors 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License